Roll No. | | | | | | | |   **Code: 006**   **SET-B**

# கோயமுத்தூர் சகோதயா கூட்டமைப்புப் பள்ளிகள்

## பொதுத்தேர்வு - 2019-2020

## பத்தாம் வகுப்பு - தமிழ்

### வினாத்தாள்

**மொ. மதிப்பெண்கள் : 80**   **கால அளவு : 3 மணி**

**இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது :**

**This question paper is is divided into four Sections:**

| | | | |
|---|---|---|---|
| பிரிவு அ | : | படித்தல் உரைநடைப்பகுதி | 15 மதிப்பெண்கள் |
| **Section A** | : | **Reading Comprehension** | **15 Marks** |
| பிரிவு ஆ | : | எழுதுதல் | 14 மதிப்பெண்கள் |
| **Section B** | : | **Writing** | **14 Marks** |
| பிரிவு இ | : | இலக்கணம் | 15 மதிப்பெண்கள் |
| **Section C** | : | **Grammar** | **15 Marks** |
| பிரிவு ஈ | : | இலக்கியம் | 36 மதிப்பெண்கள் |
| **Section D** | : | **Literature** | **36 Marks** |

**பிரிவு - அ**

**(படித்தல் உரைநடைப்பகுதி)**

1. **கீழ்வரும் பத்தியைப் படித்துஅதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5x1=5**

தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களைக் கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும் செப்பேடுகளிலும் காண முடிகிறது. கல்வெட்டுகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. செப்பேடுகள் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிக்கலாம். வட்டெழுத்து என்பது வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும். தமிழெழுத்து என்பது இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துக்களின் பழைய வரி வடிவம் ஆகும். சேர மண்டலம், பாண்டிய மண்டலம் ஆகிய பகுதிகளில் எட்டாம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கிடைக்கும் சாசனங்களில்

வட்டெழுத்துகளே இடம் பெற்றுள்ளன. முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலமான பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துகள் காணப்படுகின்றன.

**வினாக்கள்**

1. செப்பேடுகள் எந்த நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன?

   அ) கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு

   ஆ) கி.மு. எட்டாம் நூற்றாண்டு

   இ) கி.பி. ஏழாம் நூற்றாண்டு

   ஈ) கி.பி.ஆறாம் நூற்றாண்டு

2. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழமையான தமிழ் எழுத்து எது?

   அ) கிரந்த எழுத்து

   ஆ) வட்டெழுத்து

   இ) வரிவடிவ எழுத்து

   ஈ) இரட்டை எழுத்து

3. பழைய தமிழெழுத்துகள் யாருடைய காலக்கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

   அ) பாண்டியமன்னன்

   ஆ) சேர மன்னன்

   இ) முதலாம் இராஜராஜசோழன்

   ஈ) பல்லவ மன்னன்

4. கல்வெட்டுகள் எந்த நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன?

   அ) கி.மு. மூன்றாம் நூற்றாண்டு

   ஆ) கி.பி. மூன்றாம் நூற்றாண்டு

   இ) கி.பி. ஏழாம் நூற்றாண்டு

   ஈ) கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு.

5. வரிவடிவங்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

   அ) மூன்று வகையாக

   ஆ) இருவகையாக

   இ) நான்கு வகையாக

   ஈ) ஐந்து வகையாக

**2. கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5x1=5**

அக்காலத்தில் பல்வகை அரண்கள் நாட்டுக்குக் காவலாக இருந்தன. நகரைச் சூழக்காட்டரண் உண்டு. அது மிளை எனப்பட்டது. கோட்டைகள் விண்தோய் உயர்வுடையன. அவற்றைச் சூழ ஆழமான அகழிகள் உண்டு. அகழிகளில் முதலைகள் நீந்திக் கொண்டிருந்தன. அகழிகளைப் படகுகளின் உதவியால் தான் கடக்க முடியும். மதில்களை இஞ்சி, புரிசை, அகப்பா என்று குறித்துள்ளனர். கோட்டை மதிலின் உள்வட்டமே அகப்பா, சமவெளிகளில் செய்யப்பட்டனபோல் இருந்தன. எனவே ''செம்பு புனைந்தியற்றிய சேணெடும் புரிசை'' என்று பாராட்டினர். கோட்டைக்கு உள்ளே வீரர்கள் நின்று போரிடும் இடம் ஞாயில் எனப்படும். வீரர்கள் நின்று அம்பு எய்யும் இடம் ஏப்புழையாகும். கோட்டைக்கு இரண்டு சுற்றுச்சுவர் உண்டு. மதிலில் கொடிகள் அசையும் இரட்டைக் கதவுகள் உண்டு. கோட்டை மதிலின் மேல் பல பொறிகள் அமைக்கப்பட்டன. அவை சிலப்பதிகாரத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கோட்டையைக் கைப்பற்றியபின் பொருள்களைக் கவர்ந்து தமக்குள் பங்கிட்டுக்கொள்வர்.அந்நாட்டுக் கொடியை நீக்கிவிட்டுத் தம் நாட்டுக் கொடியை நாட்டுவர்.

**வினாக்கள்**

1. அகழிகளை எவ்வாறு கடக்க முடியும்?
   அ) நீந்நிக் கடக்க முடியும்
   ஆ) படகுகளின் உதவியால் கடக்க முடியும்
   இ) பாலத்தின் மூலம் கடக்க முடியும்
   ஈ) கயிறு மூலம் கடக்க முடியும்
2. கோட்டை மதிலின் உள்வட்டத்தை எவ்வாறு குறித்துள்ளனர்?
   அ) புரிசை
   ஆ) அகப்பா
   இ) மிளை
   ஈ) தண்டு
3. கோட்டையைக் கைப்பற்றியபின் என்ன நிகழும்?
   அ) அரசனைச் சிறைப்பிடிப்பர்
   ஆ) அகழியில் தப்பிச் செல்வர்
   இ) வீரர்களைப் பாராட்டுவர்
   ஈ) வென்றவர் தம்நாட்டுக் கொடியை நாட்டுவர்

4. அக்காலத்தில் நாட்டிற்குக் காவலாக அமைந்தவை யாவை?

அ) கடல்கள்

ஆ) அரண்மனைகள்

இ) வீடுகள்

ஈ) அரண்கள்

5. கோட்டைக்குள் வீரர்கள் நின்று போர் புரியும் இடம்

அ) ஞாயில்

ஆ) இஞ்சி

இ) செம்பு

ஈ) ஏப்புழை

**3. பின்வரும் பத்தியைப் படித்து அதனை மூன்றில் ஒரு பங்காகச்சுருக்கி எழுதுக.** **1x5=5**

சென்னையில் ஒரு குழுவினர் பள்ளி ஒன்றை நடத்திவந்தனர். அப்பள்ளியின் ஆசிரியரான வேமூர் நரசிம்மர் என்பவர் ஏழை மாணவர்க்கு நண்பகல் இலவச உணவு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கினார். அதற்காக பொருளுதவிபெற அவர் அணுகியவர்களுள் மருத்துவ மாமேதை குருசாமியும் ஒருவர் அத்திட்டத்தின் சிறப்பை உணர்ந்த குருசாமி மறுநாள் அவரைச் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வருமாறு கேட்டுக் கொண்டார். எழும்பூர் கென்னத்துச் சாலையில் தமக்கு உரிமையாக இருந்த மாளிகை ஒன்றைப் பள்ளிக்குப் பத்திரம் எழுதிப் பதிவு செய்துகொடுத்தார். அன்னாரின் உதவும் மனப்பான்மை அளவிடற்கரியது. உதவிக்கு எல்லையில்லை. ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப உதவிகள் வேறுபடும். எனவே தேவைப்படுவோருக்கு உதவுவதே உதவியாகும். அதுவே, மனிதனுக்குரிய சிறந்தபண்பு ஆகும்.

**பிரிவு - ஆ (எழுதுதல்)**

**4. கொடுக்கப்பட்ட தலைப்புகளுள் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று எழுதுக.** **1x6=6**

அ. உங்கள் பகுதியில் பேருந்து நிழற்குடை ஒன்று அமைத்துத் தருமாறு வேண்டி சென்னை மாநகராட்சி ஆணையர்க்குக் கடிதம் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ. மாநில அளவில் நடந்த கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற உன் நண்பனைப் பாராட்டி ஒரு கடிதம் வரைக.

(எக்கடிதமாயினும் உமது முகவரி / த.கரிகாலன் / த.கனிமொழி, எண் -13 வள்ளுவர் தெரு, அண்ணாநகர், சென்னை 600040)

**5. கொடுக்கப்பட்ட தலைப்புகளுள் ஏதேனும் ஒரு குறிப்பினைப் பயன்படுத்தி கட்டுரை ஒன்று எழுதுக. 1x8=8**

அ. தலைப்பு - முன்னுரை-கல்வியின் அவசியம் - கற்றவரின் மேன்மை - கல்வி கற்பதால் பெறும் பயன் - வள்ளுவர் நெறி - முடிவுரை.

ஆ. தலைப்பு - முன்னுரை - கூடி வாழ்ந்தால் கோடி நன்மை - ஒற்றுமையே பலம் பிற நாட்டவரின் நுழைவு - வேற்றுமையில் ஒற்றுமை தேசியம் காப்போம் - இளைஞர்களின் கடமை - முடிவுரை.

இ. தலைப்பு - முன்னுரை முயற்சியாளன் - முயற்சியும் வாழ்க்கையும் - முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் - மாணவர்கள் முயற்சி - முடிவுரை.

## பிரிவு - இ (இலக்கணம்)

**6. சான்று தருக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) 3x1=3**

1. செய்யுளிசை அளபெடை

அ) வரனசை இ

ஆ) தொழா அர்

இ) கெடுப்பதூஉம்

ஈ) இலங்ங்கு

2. அன்மொழித் தொகை

அ) சிவப்புச்சட்டை பேசினார்

ஆ) வீசுதென்றல்

இ) மலர்க்கை

ஈ) சாரைப்பாம்பு

3. விளித்தொடர்

அ) அன்பால் கட்டினார்

ஆ) பாடி மகிழ்ந்தனர்

இ) நண்பா எழுது

ஈ) கேட்டபாடல்

4. கார்காலம்

அ) ஆவணி, புரட்டாசி

ஆ) மார்கழி, தை

இ) சித்திரை, வைகாசி

ஈ) ஐப்பசி, கார்த்திகை

5. அறியாவினா

அ) சிலப்பதிகாரத்தை இயற்றியது யார்? என மாணவர் ஆசிரியரிடம் கேட்பது

ஆ) பருப்பு உள்ளதா? என கடைக்காரரிடம் கேட்பது.

இ) திருக்குறளை இயற்றியது யார்? என ஆசிரியர் மாணவரிடம் கேட்பது.

ஈ) அங்கே கிடப்பது பாம்பா? கயிறா? என கேட்பது .

**7. கோடிட்ட இடங்களை நிரப்புக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) 3x1=3**

1. ஒரு சொல் இரண்டு மூன்று முறை வருவது _________ ஆகும்.

அ) அடுக்குத் தொடர்

ஆ) இரட்டைக் கிளவி

இ) உரிச்சொல் தொடர்

ஈ) இடைச்சொல் தொடர்

2. செய்யுளிசை அளபெடையின் வேறு பெயர் _________

அ) இசைநிறை அளபெடை

ஆ) சொல்லிசை அளபெடை

இ) ஒற்றளபெடை

ஈ) இன்னிசை அளபெடை

3. இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் _________ எனப்படும்.

அ) வழாநிலை

ஆ) வழுவமைதி

இ) வழு

ஈ) தன்மைப்பெயர்

4. காலம் கரந்த பெயரெச்சம் _________ எனப்படும் .

அ) உவமைத் தொகை

ஆ) வினைத் தொகை

இ) வேற்றுமைத் தொகை

ஈ) உம்மைத் தொகை

5. வினாவிற்கு விடையாக இனமான மற்றொன்றை விடையாகக் கூறுவது __________ விடை எனப்படும்.

அ) ஏவல்

ஆ) இனமொழி

இ) மறை

ஈ) சுட்டு

**8. கூறியவாறு செய்க. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)** **3x1=3**

1. ஆவாரம் பூ (சிறப்புப் பெயர் எது)

அ) ஆவாரம்

ஆ) பூ

இ) ஆவாரம் பூ

ஈ) பூஆவாரம்

2. ஐ, ஔ (இன எழுத்து கூறு)

அ) இ, உ

ஆ) ஐ, ஔ

இ) அ, ஆ

ஈ) உ, ஏ

3. பேறு (முதனிலை தொழிற்பெயராக மாற்று)

அ) பேறுதல்

ஆ) பெறுதல்

இ) பெறு

ஈ) பெற்றான்

4. நெய்தல் (சிறுபொழுது கூறு)

அ) மாலை

ஆ) எற்பாடு

இ) நண்பகல்

ஈ) வைகறை

5. பருப்பு உள்ளதா? (எவ்வகை வினா)

அ) ஐயவினா

ஆ) கொளல் வினா

இ) ஏவல் வினா

ஈ) கொடைவினா

**9. இலக்கணக் குறிப்பு தருக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) 3x1=3**

1. மோகன் வந்தாள்

அ) பால் வழா

ஆ) பால் வழு

இ) திணை வழு

ஈ) திணை வழா

2. ‘‘ஆலத்து மேல குவளை குளத்துள

வாலின் நெடிய குரங்கு’’

அ) ஆற்றுநீர்ப் பொருள் கோள்

ஆ) கொண்டு கூட்டுப் பொருள்கோள்

இ) நிரல் நிறைப் பொருள் கோள்

ஈ) தாப்பிசைப் பொருள் கோள்

3. விழுந்த மரம்

அ) வினையெச்சத் தொடர்

ஆ) பெயரெச்சத் தொடர்

இ) இடைத்தொடர்

ஈ) தெரிநிலைபெயரெச்சத்தொடர்

4. தாய்சேய்

அ) உவமைத் தொகை

ஆ) அன்மொழித் தொகை

இ) பண்புத் தொகை

ஈ) உம்மைத் தொகை

5. நிலமும் பொழுதும்

அ) கருப்பொருள்

ஆ) உரிப்பொருள்

இ) முதற்பொருள்

ஈ) ஏதுமில்லை

**10. சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3x1=3**

(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)

1. அ) வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது பெயரைச்சத்தொடர்

ஆ) வினை முற்றுடன் ஒரு பெயர் தொடர்வது வேற்றுமைத் தொடர்

இ) வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது வினையெச்சத் தொடர்

ஈ) வினைமுற்றுடன் ஒரு பெயர்தொடர்வது வினைமுற்றுத் தொடர்

2. அ) பெரும் பொழுது என்பது ஒரு நாளின் கூறுபாடு

ஆ) பெரும் பொழுது என்பது ஓராண்டின் கூறுபாடு

இ) பெரும் பொழுது என்பது ஆறு நாட்களின் கூறுபாடு

ஈ) பெரும்பொழுது என்பது ஒருநாளில் ஆறுபிரிவுகளின் கூறுபாடு

3. அ) பால் என்பது இடத்தின் உட்பிரிவு

ஆ) பால் என்பது காலத்தின் உட்பிரிவு

இ) பால் என்பது திணையின் உட்பிரிவு

ஈ) பால் என்பது எண்ணின் உட்பிரிவு

4. அ) விடை எண் வகைப்படும்

ஆ) விடை ஆறு வகைப்படும்

இ) விடை ஏழு வகைப்படும்

ஈ) விடை பத்து வகைப்படும்.

5. அ) சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது சொற்றொடர் எனப்படும்

ஆ) சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது பொதுமொழி எனப்படும்

இ) சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது தொடர் மொழி எனப்படும்

ஈ) சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது வேற்றுமை எனப்படும்

### பிரிவு - ஈ (இலக்கியம் - தமிழ்ப் பாட நூல்கள்)

**11. பின்வரும் உரைநடைப் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. 5x1=5**

புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலைவைக்கத் திண்டும் அமைத்தனர் முன்னோர். இன்று வீட்டிற்குத் திண்ணை வைத்துக் கட்டுவதுமில்லை. அறிமுகம் இல்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதும்

இல்லை. இருப்பினும் திருவிழாக்காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அன்போடு அழைத்து விருந்தளிப்பதைக் காண முடிகிறது. முன்னர் திருமணத்தை உறுதி செய்தல், திருமணம், வளைகாப்பு, பிறந்தநாள், புதுமனைப் புகுவிழா போன்றவற்றை இல்ல விழாக்களாகவே கொண்டாடினர். அப்போது மிகுதியான விருந்தினர்களை வரவேற்று விருந்தளித்து மகிழ்ந்தனர். அந்த இல்ல விழா நாள்களில் அப்பகுதிவாழ் மக்களும் வெளியூர் விருந்தினர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தனர்.

**வினாக்கள்**

1. விருந்தினர் - பொருள் தருக.
2. விருந்தினர் தங்க வீட்டின் முன்புறம் என்ன அமைக்கப்பட்டிருந்தது?
3. வெளியூர் விருந்தினர்களுக்கு உணவளிப்பவர்கள் யார்?
4. அறிமுகம் இல்லாதவர்களை _________ ஏற்பது இல்லை.
5. இல்ல விழாக்களைக் குறிப்பிடுக.

**12. பின்வரும் செய்யுட் பகுதியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய விடைகளை எழுதுக.** **4x1=4**

''சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள் கைய
கொடுங் கோற் கோவலர் பின் நின்று உய்த்தர''

**வினாக்கள்**

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?

   அ) காசிக்காண்டம்

   ஆ) சீவகசிந்தாமணி

   இ) முல்லைப் பாட்டு

   ஈ) சிலப்பதிகாரம்

2. இப்பாடல் இடம் பெற்ற நூல் _________ நூல்களுள் ஒன்று.

   அ) சங்க இலக்கியம்

   ஆ) புறநானூறு

   இ) எட்டுத் தொகை

   ஈ) பத்துப்பாட்டு

3. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) கம்பர்

ஆ) நப்பூதனார்

இ) இளங்கோவடிகள்

ஈ) சேக்கிழார்

4. சுவல் - பொருள் தருக.

அ) தோள்

ஆ) தேர்ச்சக்கரம்

இ) அழித்தல்

ஈ) தோல்

**13. பின்வரும் குறட்பாக்களில் விடுபட்ட சீர்களை எழுதுக. 4x½=2**

அ. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் _________

_________ காண்ப தறிவு.

ஆ. சொல்லப் பயன்படுவர் சான்றோர் _________

கொல்லப் _________ கீழ்

**14. பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2x4=8**

1. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையென பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.
2. இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவி சாய்ந்த நிகழ்வுகளை நயத்துடன் விளக்குக.
3. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு கூறுவன யாவை?
4. சிறந்த அமைச்சுக்குக் கூறிய இலக்கணம் மற்றும் பொருள் செயல் வகை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

**15. பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடைதருக. 2x5=10**

1. நிகழ்கலைகளுள் காவடியாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம், குறித்து விளக்குக.
2. மனிதனால் காற்று மாசுபடுவதையும் அதனைத் தடுக்கும் வழிமுறைகளையும் விளக்குக.

3. அறவுணர்வும் தமிழர் மரபும், இன்மையிலும் விருந்தோம்பல் குறித்து விளக்குக.

4. செயற்கை நுண்ணறிவின் எதிர்காலச் செயல்பாடுகள் பற்றி எழுதுக?

5. ஒரு தாவரத்தின் அடிவகை, இலைவகை, பிஞ்சுவகையில் காணப்படும் தமிழ்ச்சொல் வளங்களைக் கூறுக.

**16. பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒரு தலைப்பின் கீழ் துணைப்பாடக் கட்டுரை எழுதுக.** **1x7=7**

1. உரைநடையின் அணிநலன்கள்
2. பாய்ச்சல்
3. விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை